


ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில் பேப்பர் பேக் தயாரிக்கும் மெஷின் துவக்க விழா நடந்தது.

# அமர்சேவா சங்கத்தில் பேப்பர் பேக் தயாரிக்கும் மெஷின் துவக்க விழா

கடையநல்லூர், மார்ச் 21–

ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில் பேப்பர் பேக் தயாரிக்கும் மெஷின் துவக்க விழா நடந்தது.

ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில் மாற்றுத்திறனாளிகள் திறன் மேம்படுத்தவும், வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையிலும் பேப்பர் பேக் தயாரிக்கும் மெஷின், குற்றாலம் ரோட்டரி கிளப் சாரல் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இதன் துவக்க விழா நிகழ்ச்சிக்கு ரோட்டரி துணை கவர்னர் சேகர், ரோட்டரி தலைவர் டாக்டர் முத்துராமன், செயலர் திலீப், பொருளாளர் ராமகிருஷ்ணன் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அமர்சேவா சங்கத்தின் முதன்மை கணக்காளர் ராஜேஸ்வரன் வரவேற்றார். தலைவர் ராமகிருஷ்ணன் மற்றும் செயலர் சங்கரராமன் சிறப்புரையாற்றினர். ரோட்டரி கிளப் நிர்வாகிகள் வளாகத்தில் மரக்கன்று நடவு செய்தனர். அமர் பவுண்டேஷன் சண்முகம் நன்றி கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், மேற்கண்ட செயல்முறைகள் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்கு மிகவும் முக்கியமானது என்பதால் சமூகம், பாதிக்கப்பட்ட தனிநபர் மற்றும் அவர்களின் குடும்பங்களையும் சிறப்பாக ஆதரிக்க வேண்டிய நிலையை புரிந்து கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் கோடிட்டுக் காட்டினார். மேலும் விவரங்கள் அறிய திரு. தாமரைச்செல்வன் அவர்களை செல் : 90202 90031 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## மாற்றுத்திறனாளிகள் வாழ்வு மேம்பட தொழிற்பயிற்சி




ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில், மாற்றுத்திறனாளிகள் திறனை மேம்படுத்தவும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு ஏதுவாக, தொழில்பயிற்சி பெறவும் பேப்பர் பேக் தயாரித்து அதன் மூலம் சங்கத்தின் உறுப்பினர்களின் வாழ்வாதாரம் உயரவும், பைல் மற்றும் பேப்பர் பேக் தயாரிக்கும் எந்திரத்தை, குற்றாலம் ரோட்டரி கிளப் சாரல் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டது.




இதன் திறப்பு விழா 17.3.2025 அன்று மாலை 5:30 மணிக்கு தொடங்கியது. இந்நிகழ்ச்சிக்கு ரோட்டரி துணை கவர்னர் திரு.சேகர் ரோட்டரி ப்ரெசிடெண்ட் டாக்டர் முத்துராமன், செயலர் திலீப், பொருளாளர் ராமகிருஷ்ணன் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அமர்சேவா சங்கத்தின் முதன்மை கணக்காளர் திரு.ராஜேஸ்வரன் வரவேற்புரை ஆற்றினார்கள். தலைவர் திரு.S. ராமகிருஷ்ணன் மற்றும் செயலர் திரு.S. சங்கர ராமன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ரோட்டரி கிளப் நிர்வாகிகளால் வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது. நிகழ்ச்சியினை அமர் பவுண்டேஷன் திரு. சண்முகம் அவர்கள் தொகுத்து வழங்கி நன்றி உரையாற்றினார்.